செ.வெ.எண்.63 நாள்: 27.03.2020

# தூத்துக்குடி மாவட்டத்தில் முதியவர்கள், நோயாளிகள், கர்ப்பிணி பெண்கள் மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்கள், டயாலிசிஸ் சிகிச்சை பெறுபவர்கள் அவசர உதவி தேவைப்படின் 108 மற்றும் 102 ஆம்புலன்ஸ் சேவையை பயன்படுத்தலாம் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்

---

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவுப்படி தூத்துக்குடி மாவட்டத்தில் கொரானோ தொற்றை தடுக்கும் வகையில் தீவிரமான தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், கர்ப்பிணி பெண்கள், ரத்தக்கொதிப்பு, நீரிழிவு, காசநோய், எச்.ஐ.வி. தொற்று உள்ளோர் போன்றவர்கள் அரசு மருத்துவமனைகளில் இலவசமாக மாத்திரை, மருந்துகள் பெற்று வருகின்றனர். அவர்களுக்கு 2 மாதங்களுக்கான மருந்து, மாத்திரைகளை மொத்தமாக வழங்கிட உத்தரவிட்டுள்ளார்கள். அதைப்போன்று முதியவர்கள், நோயாளிகள், கர்ப்பிணி பெண்கள் மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்கள், டயாலிசிஸ் சிகிச்சை பெறுபவர்கள் அவசர உதவி தேவைப்படின் 108 ஆம்புலன்ஸ் சேவையை பயன்படுத்தலாம் எனவும் அறிவித்துள்ளார்கள். எனவே, தூத்துக்குடி மாவட்டத்தை சேர்ந்த மேற்கண்ட நபர்கள் 108 மற்றும் 102 ஆம்புலன்ஸ் சேவைகளை பயன்படுத்திக்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.